# இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபை

## வாய்ப்பு விளம்பரம்

**சாரதி (பதவி வெற்றிடங்கள் 2)**
**பதவிக்குரிய அலுவலகக் கடமைகள்**

- ஒப்படைக்கப்பட்டுள்ள வாகனத்தை பாதுகாப்பாகவும் அவதானமாகவும் கையாளுதல்.
- பாதுகாப்பாக வாகனத்தை ஓட்டுதல்.
- வாகனத்தை செலுத்த முன்னர் உதிரிப்பாகங்கள் சிறந்த நிலையில் உள்ளனவா என்பதை பரிசீலித்துப் பார்த்தல்.
- எரிபொருளுக்கும் வாகன ஓட்டத்திற்கும் தேவையானவற்றையும் ஏனையவற்றையும் அனுமதிக்கப்பட்டுள்ள மட்டுப்பாடுகளுக்குள் பேணுதல்.
- வாகனத்தின் நிலை, விபத்து அறிக்கைகள், சம்பவ அறிக்கைகள், எரிபொருள் கொள்வனவு, வாகனங்களின் பராமரிப்பு, வாகன ஓட்டக் குறிப்பு அறிக்கைகள் மற்றும் முகாமை செய்ய தேவையான ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உரிய முறையில் இற்றைப்படுத்திப் பேணுதல்.
- ஒப்படைக்கப்பட்டுள்ள வாகனத்தை சுத்தமாக வைத்திருத்தல்.
- ஒழுக்கமாகவும் விநயமாகவும் கடமைகளை நிறைவேற்றுதல்.
- பிரிவுத் தலைவரும்/அல்லது நிறுவன தலைவரும் பணிக்கும் ஏனைய அலுவலப் பணிகளை நிறைவேற்றுதல்.

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

**கல்வித் தகைமைகள்**
கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு (2) திறைமைச்சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**திறன்கள்**
மோட்டார் வாகன ஆணையாளர் நாயகம் வழங்கிய கனரக வாகனங்களை செலுத்தக்கூடிய சாரதி அனுமதிப் பத்திரமும் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்ற பின்னர் வாகனம் ஓட்டுவதில் குறைந்தது மூன்று (3) வருட கால அனுபவமும் இருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**
மோட்டார் வாகன ஆணையாளர் நாயகம் வழங்கிய கனரக வாகனங்களை செலுத்தக்கூடிய சாரதி அனுமதிப் பத்திரமும் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்ற பின்னர் வாகனம் ஓட்டுவதில் குறைந்தது மூன்று (3) வருட கால அனுபவமும் இருத்தல்.

அத்துடன்

ஆரம்பப் பகுதித் திறன் (PL 2) அல்லது ஆரம்ப திறன் சாராத (PL 1) சேவை வகுதியில் ஐந்து (5) வருட திருப்தியான சேவை காலத்தைப் பெற்றிருத்தல்.

**வயதெல்லை**
18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**சம்பள அளவுத்திட்டம்**

PL 3 **ரூ**. 26,290/- 10 x **ரூ**.270/- 10 x **ரூ**.300/- 10 x **ரூ**.330/- 12 x **ரூ**.350/- **ரூ**.39,490/-

**ஆரம்ப சம்பளப் படிநிலை**

**ரூ**. 26,290/- + வாழ்க்கைப்படிச்செலவுக் கொடுப்பனவு + விஷேட கொடுப்பனவு

**நன்மைகள்**

- ஊழியரையும் அவரின் குடும்ப அங்கத்தவர்களையும் உள்ளடக்கிய கவர்ச்சியான ஒரு மருத்துவக் காப்புறுதித் திட்டம்
- கடன் வசதிகள்
- தொழில் முன்னேற்றத்திற்கான பயிற்சி வாய்ப்புகள்
- போக்குவரத்துக் கொடுப்பனவு

அக்கறையுடைய குறித்த தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்கள் **https://www.sltda.gov.lk/en/careers** என்ற எமது இணையத்தளத்திலிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்**.**

நீங்கள் தொழிலுக்குப் பொருத்தம் என நினைத்தால் விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி உறவினர்கள் அல்லாத இரண்டு நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, உங்களின் சுய தகவல் அறிக்கையையும் (**CV**)**,** கல்வி/தொழில் தகைமை சான்றிதழ்களின் பிரதிகளுடனும், சேவை அனுபவத்தை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழ்களின் பிரதிகளுடனும் பதிவுத் தபாலில் தலைவர், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, இலக்கம் 80, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு **13.12.2024** ஆம் திகதிற்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும்.

விண்ணப்பிக்கப்படும் பதவி கடித உறையின் இடதுபக்க மேல்மூலயில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்களில் / அரச கூட்டுத்தாபனங்களில் / நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அந்தந்தத் திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்பிவைக்க வேண்டும்.

**தலைவர்**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை**
**இலக்கம் 80**, **காலி வீதி**,
**கொழும்பு 03**